அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா - 2 | ஜூன் - 2018 | மலர்-18

## சபைக்குத் தேவன் தரும் மன்னா

### சபையின் அங்கமாகிய நீ செய்ய வேண்டியது என்ன?

“செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்;...” (பிரசங்கி 9:10).

இது பரிசுத்த ஆவியின் கட்டளை. ஆகவே விசுவாசியே, செய்ய வேண்டிய காரியங்களை உன் முழுபெலத்தோடே செய். கர்த்தர் உனக்குக் கொடுத்துள்ள நேரத்தை அவருக்காகப் பயன்படுத்து. ஆரோக்கியத்தோடும், பெலத்தோடும் இருக்கும்போது கர்த்தருக்கென்று பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் உன்னால் கர்த்தருக்கென்று ஓடியாடி ஊழியஞ்செய்யமுடியாத நாட்கள் வரும். அப்பொழுது, “தருணத்தை இழந்துவிட்டேனே” என்று வருந்தவேண்டிய நிலை ஏற்படலாம். ஆகையால் காலத்தை ஆதாயப்படுத்து. இன்றே கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசி.

விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காக எரிந்து பிரகாசிக்க விரும்புகின்றாயா? அல்லது கட்டிலின் அடியில் இருக்கும் வெளிச்சத்தைப்போல் பயனற்றவனாக இருக்க விரும்புகின்றாயா? இன்றே உன் முழுபெலத்தோடு கர்த்தருக்கென்று எழுந்து ஊழியஞ்செய்.

முன்னேற்றத்தை விரும்பும் விளையாட்டு வீரர்கள் சோம்பலுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள். மீனவர்கள் தங்கள் வலையைப் படகுக்குள் போட்டுவிட்டு, மீன் கிடைக்கும் என்று பகற்கனவு காணமாட்டார்கள். வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்பவன் தன்னுடைய வீட்டையே சுற்றி சுற்றி வலம் வரமாட்டான். அதைப்போலவே நீ உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கி. இது இயேசு உனக்குத் தந்துள்ள கட்டளை (மாற்கு 16:15). நரகத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும் மக்களை

இயேசுவுக்கு நேராக வழிநடத்துவது உங்கள் கடமை. நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

**பிதாவின் சித்தம்**

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” (மத்தேயு 7:21).

மனிதர்களில் பலர் பரலோக இராஜ்ஜியத்திற்குச் செல்ல வழி என்ன? என்பதைக் கண்டுபிடிக்க முயல்கின்றனர். கிறிஸ்தவனாகிய நீயோ பரலோகத்திற்குச் செல்லும் பாதையை நன்கு அறிந்திருக்கிறாய். சோம்பேறிகள் அப்பாதையில் முன்னேறுவதில்லை. தாங்கள் விரும்பும் பாதையில் செல்வோரும் பரம பாக்கியம் பெறுவதில்லை. தேவசித்தம் செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான். தேவசித்தம் என்ன?

**இரட்சிப்புக்காகக் கிரியை செய்**

“எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்” (1 தீமோத்தேயு 2:4).

சகோதரனே! நீ இப்பொழுது கிருபையின் நாட்களில் இருக்கின்றாய். ஒருநாள் வரும், அப்பொழுது இயேசு நியாயாசனத்தில் வீற்றிருப்பார். அதற்கு முன்பாக இயேசுவுக்கென்று செய்யவேண்டிய ஊழியத்தை நிறைவேற்று.

இன்றே ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்று.

சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இயேசுவின் குரலைக் கேட்டபோது, “ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்...” (அப்போஸ்தலர் 9:6).

சகோதரனே, நீ இதுவரையிலும் பெயரளவில் ஒரு கிறிஸ்தவனாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று சவுலைப்போல கர்த்தரிடம் அவர் சித்தம் என்னவென்று கேள். அவரது சித்தத்திற்கு உன்னை ஒப்புக்கொடு. அப்பொழுது அவர் உன்னை வல்லமையாக எடுத்துப் பயன்படுத்துவார்.

**நியாயஞ்செய்**

‘‘மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு

அறிவித்திருக்கிறார்: நியாயஞ்செய்து..." (மீகா 6:8).

"நியாயஞ்செய்" என்றால் மனிதரிடம் நீ திரும்பாமல், கர்த்தரின் பார்வையில் எது சரியானது எனக் கண்டறிந்து அதை நிறைவேற்றுவதாகும். நீ மனிதரைத் திருப்திசெய்வதற்காக அவர்களது பாராட்டைப்பெற ஊழியஞ்செய்கின்றாயா? அல்லது கர்த்தருக்காக உண்மையோடும், உத்தமத்தோடும், நேர்மையோடும் ஊழியஞ்செய்கின்றாயா?

"...பினெகாஸ் எழுந்து நின்று நியாயஞ்செய்தான்; அதினால் வாதை நிறுத்தப்பட்டது" (சங்கீதம் 106:30).

விசுவாசியே! உன்னுடைய குடும்பத்தில் மற்றும் உன்னுடைய வாழ்க்கையில் காணப்படும் இரகசிய பாவங்களை முழுவதுமாய் அகற்றிவிட்டுக் கர்த்தருக்கென்று எழுந்து நில். கர்த்தருக்காக வைராக்கியங்கொள். அப்பொழுது கர்த்தர் உனக்குத் தமது கிருபையை அளவில்லாமல் அருளுவார்.

**சுவிசேஷகனுடைய வேலையைச் செய்**

"...சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோத்தேயு 4:5).

நாம் தேவனுடைய திராட்சத்தோட்டத்தின் வேலைக்காரர்களாக இருக்கின்றோம். ஆகையால் நீ ஆத்தும பாரத்தோடு கர்த்தருக்கு ஊழியஞ்செய். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் ஆத்தும பாரத்தோடு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யவேண்டும்.

தேவபிள்ளையே! நீ தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்து கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றுகின்றாயா? இயேசுவோடு சேர்ந்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தாதவன் பிசாசோடு சேர்ந்து ஆத்துமாக்களைச் சிதறடிக்கிறான். இது இயேசுவின் எச்சரிக்கை.

பிலிப்பு ஒரு சுவிசேஷகனாக இருந்தான். அவன் ஆத்தும பாரமுடையவனாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். ஆகையால் ஆவியானவரும் அவனை வல்லமையாகப் பயன்படுத்தினார். பிலிப்பின் மூலமாக ஆவியானவர் எத்தியோப்பிய மந்திரியை இரட்சித்தார். பின்னர் எத்தியோப்பியா கிறிஸ்தவ நாடாக மாற அது காரணமாக இருந்தது.

**இயேசு செய்தவற்றைச் செய்**

"நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15).

விசுவாசியே! இயேசுவைப்போல் தாழ்மையோடு செயல்படு. அவரே உனக்கு நல்ல முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை முழுவதிலும் அவருடைய தாழ்மையையே நீ காணலாம். பாவமற்ற இயேசுகிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாக ஒரு குற்றவாளியாக நின்றார். அநியாயமாகத் தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை ஏற்றுக்கொண்டார்.

விசுவாசியே! இதைப்போன்ற பாதையில் செல்வது உனக்குக் கடினமாகத் தோன்றலாம். ஆனால் நீ இயேசுவைப் பின்பற்றவேண்டும் என்று வாஞ்சிக்கும்போது அவர் அதற்குத் தேவையான ஆவிக்குரிய வல்லமையைத் தருவார். சீஷர்களின் கால்களை அவர் கழுவியதுபோல் நீ உன்னை முற்றிலுமாகத் தாழ்த்திப் பிறருக்கு ஊழியஞ்செய். அப்பொழுது அவர் உன் ஊழியத்தை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

**ஆதியில் செய்த கிரியைகளைச் செய்**

"...நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக;..." (வெளிப்படுத்தல் 2:5).

இயேசு கிறிஸ்து எபேசு சபையில் காணப்பட்ட ஒரு குறையைச் சுட்டிக்காட்டினார். இன்று அநேக விசுவாசிகள் தங்களது ஆதி அன்பை, ஆதி விசுவாசத்தை, ஆதி பிரதிஷ்டையை இழந்து காணப்படுகின்றார்கள். விசுவாசியே! நீ இன்று எவ்வாறு ஜெபம் செய்கின்றாய்? நீ செய்யும் ஊழியத்தை ஆர்வத்தோடு செய்கின்றாயா? முன்பு காணப்பட்ட ஆத்தும பாரம் இப்பொழுது உன்னில் காணப்படுகின்றதா? இல்லாவிடில் உன்னுடைய ஆரம்ப நாட்களின் பிரதிஷ்டையைப் புதுப்பித்துக்கொள்.

**அன்பின் கிரியைகளைச் செய்**

"... உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்;..." (மத்தேயு 5:44).

விசுவாசியே! உன்னுடைய ஊழியத்தின் பாதையில் பல எதிர்ப்புகள் தோன்றலாம். பலர் காரணமில்லாமல் உன்னைத் தூற்றலாம். உன்னுடைய உடன் ஊழியரே உனக்கு விரோதமாகச் செயல்படலாம். ஆனால் நீ அவர்களை வெறுக்காமல் இயேசுவின் அன்பை விளங்கப்பண்ணு. சவுல் தாவீதைக் கொல்ல பல முயற்சிகளை மேற்கொண்டான். ஆனால் தாவீதோ அவனுக்கு நன்மையே செய்தான். சவுல், "தாவீதைப் பார்த்து: நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்: நானோ உனக்கு தீமைசெய்தேன்" என்றான் (1சாமுவேல் 24:17).

விசுவாசியே! தாவீதைப் பார்த்து சவுல் சாட்சிகூறியதுபோல உன்னைப் பார்த்து உன் சத்துருக்கள் சாட்சி கூறுவார்களா? இத்தகைய சாட்சி பிறரை இரட்சிப்புக்குள் வழி நடத்தும் என்பது உறுதி.

### தேவ மகிமைக்கென்று செயல்படு

"...எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1கொரிந்தியர் 10:31).

தேவபிள்ளையே! நீ தேவனை மகிமைப்படுத்த ஊழியஞ்செய்கின்றாயா? அல்லது உன் சுய மகிமையைத் தேடுகின்றாயா? இயேசு ஒரு பெரிய அற்புதத்தைச் செய்தார் "...அவர்; வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 7:14), அப்பொழுது மரித்த வாலிபன் உயிரோடு எழுந்தான். அதைக்கண்ட மக்கள், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (லூக்கா 7:16).

அற்புதத்தைச் செய்த இயேசுகிறிஸ்து மகிமையைத் தாம் எடுத்துக்கொள்ளவில்லை. அதைத் தேவனுக்குச் செலுத்தும்படியாகப் பிறரை வழிநடத்தினார். விசுவாசியே! உன் ஊழியத்தில் அற்புதங்கள் நிகழும்போது மகிமையை நீ எடுத்துக்கொள்ளாதே, அதைத் தேவனுக்கே செலுத்து. உன் ஊழியம் எப்படியிருக்கிறது? இன்றே ஆராய்ந்து பார். உன் முழுபெலத்தோடும், தாழ்மையோடும், அன்போடும் ஊழியஞ்செய். எல்லா மகிமையையும், கனத்தையும் தேவனுக்கே செலுத்து. அப்பொழுது அவர் உன்னைக் கனப்படுத்துவார். அல்லேலூயா!.

### நிபந்தனைகளை நிறைவேற்று

''கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார். நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே" (நீதிமொழிகள் 3:26,27).

இந்நாட்களில் அநேக விசுவாசிகள், வேதத்தில் காணப்படும் வாக்குத்தத்தங்கள் என் வாழ்வில் நிறைவேறவில்லையே என்று முறுமுறுக்கின்றனர். கர்த்தர் பொய் சொல்வதற்கு ஒரு மனிதனல்ல, மேலும் சொன்னவற்றை மாற்றிக்கொள்வதற்கு அவர் மனுபுத்திரனுமல்ல. மனிதன் கொடுக்கிற வாக்குறுதிகளுக்கும் கர்த்தர் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. கர்த்தர் வாக்குத்தத்தங்களைக் கொடுக்கும்போது அவற்றோடு சில நிபந்தனைகளையும் கட்டளைகளையும் கொடுக்கிறார்.

நீதிமொழிகள் 3 ஆம் அதிகாரத்தில் 26 முதல் 31 வசனங்களில், செய்யாமல் இராதே (3:27) சொல்லாதே (3:28) தீங்கு நினையாதே (3:29) வழக்காடாதே (3:30) பொறாமைகொள்ளாதே, தெரிந்து கொள்ளாதே (3:31) போன்ற கட்டளைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. விசுவாசியே! நீ கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, முழு நம்பிக்கையும் அவர்மீது வைத்துக் காத்திருப்பாயானால், அற்புதங்களைக் காண்பாய்.

**கர்த்தர் மேல் நம்பிக்கை வை**

“யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்” (சங்கீதம் 146:5).

‘‘கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன்வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்” (எரேமியா 17:7,8).

இந்த வாக்குத்தத்தத்தில் நமக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களும் அடங்கியுள்ளன. தண்ணீர் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும். ஒரு மரத்தின் பலம் வேர்களில்தான் இருக்கின்றது. கால்வாய் ஓரமாய் வேர்களைவிடும் மரமாய் நீ இருந்தால், தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நிறைவாய்ப் பெற்று வளருவாய். ஆவிக்குரிய செழிப்பை நீ எளிதில் பெற்றுக்கொள்வாய்.

விசுவாசியே! நீ ஆவிக்குரிய செழிப்பையும், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் பெறவேண்டுமானால், உன் நம்பிக்கையைக் கர்த்தர்மேல் மாத்திரமே வைக்கவேண்டும்.

‘‘ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக” (கொலோசெயர் 2:6,7).

நீ இயேசுவுக்குள் வேர்கொண்டவனாகவும், அவர்மேல் கட்டப்பட்டவனாகவும், அவருக்குள் நடக்கும்போது உன் வாழ்க்கையில் ஆவிக்குரிய செழிப்பை அனுபவிப்பாய். சோதனை காலத்திலும் சோர்வடையாமல் தவறாது கனிகொடுக்கும் கிருபையைப் பெறுவாய்.

## இரக்கம் பாராட்டு

“நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே” (நீதிமொழிகள் 3:27).

பாவம் இரண்டு வகைப்படும். ஒன்று தவறான செயலைச் செய்வதினால் வரும் பாவமாகும். மற்றொன்று, செய்யவேண்டிய செயலைச் செய்யாமல் இருப்பதனால் வரும் பாவமாகும். பிறருக்கு உதவிசெய்யத் திராணி இருந்தும் அதைச் செய்யாமல் இருந்தால் அது பாவம் செய்ததற்கு ஒப்பாகும்.

பிறருக்கு இரக்கம் காட்டாமலிருப்பது பாவமாகும். இரக்க குணம் இல்லாதவனின் இருதயத்தில் கர்த்தர் இருப்பதில்லை.

‘‘ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

“லாசரு என்னும் பேர்கொண்ட ஒருதரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து,

“அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.

“பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவாரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்.

“பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்” (லூக்கா 16:19-23).

இது இயேசு கூறின சம்பவம், இதன் கருத்தைப் புரிந்து நடந்துகொள்ளுங்கள்.

## காலம் தாழ்த்தாதே

“உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த்திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே” (நீதிமொழிகள் 3:28).

‘‘நீ போய்த் திரும்பவா, நாளைக்குத் தருவேன்’’ என்று சொல்லுகிறவன் தன்னிடம் பணம் இல்லாததுபோல் மாய்மாலம்

பண்ணுகிறான். குறிப்பாக, பண விஷயத்தில்தான் ஜனங்கள் அதிகமாகப் பொய் சொல்லுகிறார்கள்.

வேதத்தில் அனனியா, சப்பீராள் மற்றும் எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி ஆகியோர் இதற்கு உதாரணங்களாக இருக்கின்றார்கள். பண ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது. “பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது” (லேவி. 19:13). இவை தேவ கட்டளைகள்: இவற்றை உண்மையுடன் நிறைவேற்று.

**தீங்கு நினையாதே**

‘‘அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாக தீங்கு நினையாதே” (நீதிமொழிகள் 3:29).

தீமை செய்யாமல் இருப்பது அதிகக் கடினமல்ல. ஆனால் தீங்கை நினையாமல் இருப்பது சற்றுக் கடினமாகும். தாவீதோடு இருந்த அகித்தோப்பேல் அவனுக்கு விரோதமாகத் தீங்கு நினைத்தான்.

விசுவாசியே, உன்னுடைய இருதயத்தில் தீய எண்ணங்களுக்கு இடங்கொடாதே! ‘‘நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை? ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?” இதுவே பரிசுத்த ஆவியானவர் கேட்கும் கேள்வி.

**பொறாமை கொள்ளாதே**

‘‘கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே’’ (நீதிமொழிகள் 3:31);

விசுவாசியே! கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தால்மட்டும் போதாது. இயேசுவின் அன்பால் ஏவப்பட்டு, பிறருக்கு இரக்கம் பாராட்ட வேண்டும். அத்தகைய நற்கிரியைகளைச் செய்வதில் காலந்தாழ்த்தாதே. பிறருக்குத் தீமை செய்யவேண்டும் என்ற சிந்தனை உன் உள்ளத்தில் தோன்றக்கூடாது. காட்டுமிருகம் செழிப்புடன் காணப்படலாம். அதைப்போலவே செல்வச்செழிப்போடு வாழும் துன்மார்க்கரைக்கண்டு பொறாமை கொள்ளாதே. அவர்கள் நரகத்திற்குச் செல்கிறவர்கள் என்ற ஆவிக்குரிய அறிவு உனக்குத் தேவை. அவர்களது இரட்சிப்புக்காக ஜெபிப்பது உன் கடமை. அல்லேலூயா!.

# இளைப்பாறுதல்

"...நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்" (யாத்திராகமம் 33:14). இது, தேவன் மோசேக்குக் கொடுத்த வாக்குறுதி.

தேவன் நம் ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு இளைப்பாறுதல் தருகிறவர். இயேசுவும் மத்தேயு 11:28இல், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறியிருக்கிறாரே. நாம் இவ்வுலக வாழ்வில் இளைப்பாறுதலைப் பெறாவிட்டால், மரிக்கும்போதும் நம் ஆத்துமாவில் இளைப்பாறுதலிராது. எந்தவொரு மனிதன் பாவத்தில் ஜீவித்து மரிக்கிறானோ, அவன் ஆத்துமா நித்திய நித்தியமாக இளைப்பாறுதலற்ற இடத்திற்குத்தான் செல்லும். ஆனால் இவ்வுலகில் வாழும்போது, நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தரைத் தேடி, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குக் கர்த்தர் இவ்வுலகில் சமாதானத்தைக் கொடுத்து, அவர்களை மறுமையிலே இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கச் செய்வார் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

இஸ்ரவேல் தேசத்தை இராஜாக்கள் அரசாண்ட நாட்களில் அநேக யுத்தங்கள் ஏற்பட்ட காரணத்தால் சமாதானமற்ற நிலைமை காணப்பட்டது. ஆனால் சில இராஜாக்கள் தாவீதைப்போன்று கர்த்ரைத்தேடி, அவருடைய வழிகளில் நடந்ததினால் அவர்களுடைய நாட்களில் யுத்தமில்லாமல் மக்கள் சமாதானத்துடன் வாழ்ந்தனர் என்று காண்கிறோம். அவ்வாறு சமாதானத்துடன் நாட்டை ஆண்ட இராஜாக்களில் ஒருவனாகிய ஆசாவைக் குறித்துக் கீழே காண்போம்.

தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் காலத்திற்குப் பிறகு இஸ்ரவேல் நாடு இரண்டாகப் பிரிந்து, 'இஸ்ரவேல்', 'யூதா' என்ற பெயர்களுடன் அரசாளப்பட்டு வந்தது. யூதாவை அரசாண்ட அபியா மரித்தபின்பு, அவன் குமாரனாகிய ஆசா யூதாவின் இராஜாவாக முடிசூட்டப்பட்டான். "ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்" என்று II நாளாகமம் 14:2இல் வாசிக்கிறோம். அவன், கர்த்தருக்குப்பிரியமில்லாத விக்கிரகத் தோப்புக்களை வெட்டினான். யூதா மக்களுக்கு, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனைகளின்படியும் நடக்கவும் கற்பித்தான். யூதா

பட்டணங்களிலிருந்து மேடைகள், விக்கிரகத் தோப்புகளை அகற்றினான். இவ்வாறு அவன் கர்த்தரைப் பிரியப்படுத்தினபடியால், "அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது" என்று, II நாளா. 14:5இல் கூறப்பட்டுள்ளது. மேலும், "கர்த்தர் அவனுக்கு **இளைப்பாறுதலைக்** கட்டளையிட்டதினால், அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தங்கள் இல்லாதிருந்தது" என்று II நாளாகமம் 14:6 கூறுகிறது.

பிரியமானவர்களே, நீங்கள் சமாதானமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? சத்துருவின் போராட்டம் மிகுதியாய்க் காணப்படுகின்றதா? ஆசாவைப் போல கர்த்தருடைய பார்வையில் நன்மையும் செம்மையுமானதைச் செய்யுங்கள். கர்த்தர் அருவருக்கிற விக்கிரகங்களை உங்கள் வீடுகளிலிருந்து மாத்திரமல்ல, உங்கள் உள்ளங்களிலிருந்தும் அகற்றிவிடுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடுவார். ஆசாவின் கூற்று என்ன? "நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடினோம், தேடினபோது சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார்" என்பதே (II நாளா. 14:7).

எத்தியோப்பியனாகிய சேரா பத்துலட்சம் பேர்கொண்ட சேனையோடு ஆசாவுக்கு விரோதமாக வந்தபோது, அவன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, பின்வருமாறு கூறினான்: "கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்" (II நாளாகமம் 14:11).

நடந்தது என்ன? கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள்.

ஆசா கர்த்தர்மேல் வைத்திருந்த அளவற்ற விசுவாசத்தை அவன் சொற்கள் வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம். தன்னைப் பலனற்றவன் என்று தன்னைத் தாழ்த்தி, கர்த்தரிடத்தில் விண்ணப்பித்தான். கர்த்தர் அவனுக்கு உதவிசெய்தார்.

ஆசாவைப்போல கர்த்தரைத் தேடுங்கள். அப்பொழுது அவர், உங்களுக்கும் இளைப்பாறுதலைத் தருவார். நீங்கள் இம்மையிலும் மறுமையிலும் இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ள, தேவன்தாமே கிருபையளிப்பாராக.

## THE REWARD FOR YOUR WORK

"The Lord recompense thy work..." (Ruth 2:12).

God speaks to us through the words of Boaz quoted above. This is a promise to everyone of us.

When we do secular work, it is but natural for us to expect some reward from the officers who employ us, and if it is spiritual work, we know for certain that God will reward us on the Day of Judgment. Whether we will be rewarded for the good work we do in the secular position we hold or not, it is most certain that our God will reward us for working hard in God's vineyard and showing results by bringing souls to Christ. God will certainly bless you and give you the fruits of your labour.

Let us learn about Ruth the Moabite woman from the 'Book of Ruth' where we get a full picture of Ruth the daughter-in-law of Naomi.

Naomi, the wife of Elimelech a Bethlehemite, left Bethlehem with her husband and two sons because of the famine in the land, and went to Moab to live there. Her husband died, and she lived with her two sons named Mahlon and Chilion who had already taken Moabite women as wives. One was Orpha and the other, Ruth. Both her sons also died, and Naomi was left only with her two widowed daughters-in-law.

Naomi heard that the Lord had visited His people in giving them bread, and she decided to return to her native place Bethlehem. So she called her daughters -in-law Orpha and Ruth, and told them to return each to her mother's house. Both of them wept. Orpha kissed Naomi and left, whereas, Ruth was determined to go with Naomi. Seeing that Ruth could not be persuaded to go back to her people, Naomi let her go with her. Both of them journeyed to Bethlehem, and they arrived there during the season of barley harvest.

Ruth did not wish to remain idle in Bethlehem. She told her mother-in-law she would go to the field of anyone in whose eyes she would find favour, and glean corn and return. So she went, and it so happened that the field where she had gone to work was that of Boaz, a close relative of Elimelech, the late husband of Naomi.

Seeing a stranger in his field, Boaz enquirred who the young woman was, and was told that she was Naomi's daughter-in-law, a Moabitess. Boaz also came to know how she had travelled to Bethlehem with Naomi vowing she would never leave her, although Naomi had insisted on her going back to her poeple. When Boaz met Ruth, he told her not to go to anyone else's field, but stay on in his field and be with his servants. If she felt thirsty, she could drink the water brought by his servants. He was indeed very kind to her.

Let us consider what the Bible reveals about Ruth.

**1. Ruth was wise, resolute and confident — Ruth 1:16,17**

Ruth was wise in choosing to follow her mother-in-law unlike her sister (brother-in-law's wife) Orpha who went back to her people. She was prepared to accompany her mother-in-law to Bethlehem which was her husband's place as well as Naomi's, and she decided to go with her to Bethlehem without knowing anything about the place or people. However, she trusted Naomi and the God of Naomi, and she was so determined to follow Naomi that she told her firmly not to speak to her about giving up following her. Ruth 1:16 and 17 speak of her resolute nature.

Ruth was also confident about getting work in a field and finding grace in the eyes of the owner. Since the field she had accidentally gone to belonged to Boaz who was Naomi's kinsman (relative), she gleaned corn there and brought it to her mother-in-law.

## 2. Ruth was divinely led — Ruth 2:3

Though it is said that Ruth happened to stop at the part of the field belonging to Boaz, who was of the family of Elimelech, it was only by divine appointment that Ruth went to glean among ears of corn there. Ruth did not choose Boaz's field, but the Lord had a plan for Ruth, and therefore, she went there without knowing who the owner of the field was.

## 3. Ruth was hard working — Ruth 2:7

Ruth wished to work hard so that she and her mother-in-law would not lack food. She gleaned corn in the field of Boaz, and in the words of the servant set over the reapers, she came and continued from the morning till afternoon when she took a little rest (v. 7).

By nature, Ruth was hard working, and therefore, she said to her mother-in-law, "Let me go to the field and glean ears of corn..." (v.2), and when Naomi told her to go, she went and gleaned as much corn as she could. God will recompense the work of only hardworking people. Lazy people will go without food.

## 4. Ruth was humble — Ruth 2:10,13

Boaz was very concerned about Ruth's safety, and he spoke kindly to her. He told her not to go to any other field, but work only in his field, and remain with his maid servants. If she was thirsty, he said, she could drink the water which was drawn by his young men.

Hearing the words of Boaz Ruth fell on her face, and bowed to the ground (a true mark of humility), and asked Boaz why she had found favour in his eyes that he should have notificed her, knowing that she was a stranger and not one he had employed as a maid servant. Ruth humbled herself like a servant before Boaz.

**5. Ruth was spiritual — Ruth 2:11, 12**

Ruth was not an Israelite; she was a Moabitess. She was probably an idol worshipper because she did not know the only true God of Israel. It was her good fortune that she had been married to a Bethlehemite, and was under the influence of spiritual people like Naomi.

When Naomi persuaded Ruth to return to her people as Orpha had done, she refused to go back, and spoke firmly thus;

"Entreat me not to leave you,
Or to turn back from following after you;
for wherever you go, I will go;
And wherever you lodge, I will lodge;
Your people shall be my people,
And **your God, my God.**
Where you die, I will die,
And there will I be buried.
The LORD do so to me, and more also,
If anything but death parts you and me"
(Ruth 1:16,17-NKJV)

Even Boaz told her that he was informed about everything she had done for her mother-in-law since the death of her husband, and how she had left her father and mother and her native land (Moab), and come to a land and its people whom she had not known before. He also spoke a blessing to her and said that the Lord would recompense her work, and a full reward would be given to her by the LORD God of Israel under whose wings she had come to take refuge (Ruth 2:12).

We need no better poof than the sincere words of Boaz which establish the truth that Ruth trusted the LORD God of Israel whom her mother-in-law had always trusted.

The Lord enabled Ruth to marry Boaz a rich and godly man who became the ancestor of King David to whose lineage our Lord and Saviour Jesus Christ belonged (Matt. 1:5-16).

What a great honour for Ruth the humble Moabite woman!

# நிருபனின் நிருபம் ✍

"ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே கிருபையின் மன்னா நேயர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாய் இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். கடந்த மாத மன்னாவினால் திருப்தியானீர்கள் என்று நம்பி, என் தேவனை நன்றியுடன் துதிக்கிறேன்.

கோடையின் வெப்பமும், உஷ்ணகால வறட்சியும் நம்மைத் தாக்காமல் காத்த நிழலாம் இயேசுவுக்கு நன்றி சொல்லுவோமாக. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது என்ற வசனத்தின்படி (சங்கீதம் 42:1), இக்கடைசி நாட்களில் கர்த்தர் தாமே தம்மேலுள்ள வாஞ்சையை நமக்குள் அதிகமாய்ப் பெருகப்பண்ணுவாராக.

மேலும், தேர்வு எழுதின நமது பிள்ளைகளுக்குக் கர்த்தர் கொடுத்திருக்கும் நல்ல முடிவுகளுக்காகவும், மதிப்பெண்களுக்காகவும் நான் கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறேன். இக்கல்வி ஆண்டிலும் கர்த்தர்தாமே நமது பிள்ளைகளோடிருந்து, அளவில்லாத ஞானத்தினாலும், அறிவினாலும் நிரப்புவாராக. மேலும் நமது பிள்ளைகளின் படிப்பிற்கான சகல தேவைகளையும் நம்முடைய தேவன்தாமே சந்திப்பார் என்பதில் எவ்வளவேனும் சந்தேகமில்லை. ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபை அவரிடத்தில் உண்டே.

சத்தியம் விற்கப்படும் இந்நாட்களில், வேதத்தின் இரகசியங்களை நன்கு அறிந்துகொள்ள, வேதத்தைத் தவறாமல் வாசிக்க, கர்த்தர் அருள்செய்வாராக. நமது அநுதின கடமைகளும், குடும்ப பாரங்களும், பொருளாதார நெருக்கடிகளும் வேதத்தைவிட்டு நம்மைத் தூரப்படுத்தாதபடி எச்சரிப்புடன் வாழ்வோமாக. கர்த்தர் நம்மை நடத்தும் எல்லா வழிகளிலும், கர்த்தர் நல்லவர் என்பதை மட்டும் தவறாமல் ருசிப்போமாக.

"அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்" (1 யோவான் 5:20).

சிலுவையின் நிழலில்
அன்பரின் ஊழியன்
**எஸ். ஆனந்த்**
**(S. Anand)**

# SMOOTH STONES FROM THE BROOK

## GOD - GIVEN WORK
### தேவன் நமக்குத் தந்த வேலை

- THE WORK WHICH IS SET ON THE GLORY OF THE LORD
  கர்த்தரின் மகிமையைச் சார்ந்த வேலை
- THE WORK FULL OF LOVE AND JOY
  அன்பும், சந்தோஷமும் நிறைந்த வேலை
- THE WORK FULL OF HOPE AND PEACE
  நம்பிக்கையும், சமாதானமும் நிறைவாய்க் கொடுக்கின்ற வேலை
- THE WORK HIDDEN FROM THE EYES OF MAN
  மனிதனின் கண்களுக்கு மறைக்கப்பட்ட வேலை
- THE WORK OPEN TO THE EYES OF GOD
  தேவனுடைய கண்களுக்கு வெளியரங்கமாயிருக்கிற வேலை
- THE WORK AT ALL POINTS SEARCHED BY GOD
  எல்லா நிலையிலும் தேவனால் சோதித்தறியப்படுகிறவேலை
- THE WORK WHOSE NEEDS ARE SUPPLIED BY THE LORD HIMSELF
  தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்படுகின்ற வேலை.
- WHATSOEVER THY HAND FINDETH TO DO, DO IT WITH THY MIGHT (ECCL. 9:10).
  செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் (பிரசங்கி 9:10).

*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**

L.R. Graphics, Ph : 2489 5236